**அசல்வழக்கு எண். OS.111/2022- PW1 .**

**திரு .சீனிவாசன் த/பெ.வெங்கடப்பா**

**நாள்:26.03.2026.**

**குறுக்கு விசாரணை 1, 2 பிரதிவாதிகள் தரப்பில்**

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் நான் படிக்கவில்லை. எனக்கு தமிழ் எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வழக்குரை விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு தாக்கல் செய்வதற்கு விவரங்கள் நான் தான் வழக்கிறஞரிடம் சொன்னேன். இந்த வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர் வழக்குரை தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.307 ல் 2 ஏக்கர் 54 சென்ட் ஆரம்பத்தில் ஸ்ரீகாந்த்ஐயா என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனக்கு தெலுங்கு எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியாது. முனியப்பா என்பவர் ஸ்ரீகாந்த்ய்யா என்பவரிடம் சர்வே எண்.307 ல் 1 ஏக்கர் 27 சென்ட் வாங்கியிருக்கிறார் என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் வெங்கடப்பா ஆகும். என் தகப்பனார் தற்போது இறந்துவிட்டார். என் அப்பாவிற்கு எத்தனை குழந்தைகள் என்றால் மொத்தம் 6 பேர் அதில் ஒருவர் இறந்துவிட்டார். அவர்கள் பெயர் 1.சின்னம்மா, 2.நாராயணப்பா, 3. அனுமக்கா, 4. புட்டம்மா, 5. கிருஷ்ணா, 6. சீனிவாசன் (நான்). என் தகப்பனார் எப்பொழுது இறந்தார் என்றால் தேதி, மாதம், வருடம் தெரியாது. இந்த வழக்கில் நான் என் தகப்பனாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு சுயராஜிய சொத்தா

என்றால் என் தகப்பனார் வாங்கிய சொத்து ஆகும். தாவா சொத்து என் தகப்பனார் இறந்த பிறகு என் தகப்பனாரின் அனைத்து வாரிசுகளுக்கும் பாகம் உள்ளது என்றால் இல்லை. அது என் பாகத்திற்கு வந்தது ஆகும். என் குடும்பத்திற்குள் பாகபிரிவினை பத்திரம் 04.05.2010 ம் தேதியில் செய்திருக்கிறோம் என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் எனக்கு எத்தனை சர்வே எண்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சர்வே எண்.307/2 ஒதுக்கப்பட்டது. என்னுடைய பங்கு 32 சென்ட் வந்தது. 13 சென்ட் முரளிதரன் மற்றும் நரேந்திரபாபுவிடம் உள்ளது அது எனக்கு வரவேண்டும். பாகபிரிவினையில் மொத்தம் நான் 45 சென்ட் கேட்கிறேனா என்றால் ஆமாம். என் தகப்பனார் வாங்கிய 1 ஏக்கர் 27 சென்டினை நாங்கள் பிரித்து கொண்டோமா என்றால் பிரித்து கொண்டோம். அந்த பாகபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் தான் நாங்கள் சுவாதினத்தில் இருக்கிறோம் என்றால் இல்லை. எனக்கு வந்த சர்வே எண்ணின் உட்பிரிவு என்ன என்றால் சர்வே எண்.307/A2A. அதில் 32 சென்டிற்கு பட்டா வந்தது. சர்வே எண் 307 ல் எவ்வளவு உட்பிரிவு இருக்கிறது என்றால் அது எனக்கு தெரியாது. 1968 ல் சர்வே எண்.307 ஆனது 307/1 , 307/2 என உட்பிரிவு ஆகியிருக்கிறது என்றால் சரிதான். சர்வே எண்.307/2 முனிகாடு வாங்கியது என்றால் இல்லை. வெங்கடப்பா வாங்கியது ஆகும். சர்வே எண்.307/2 எங்களது குடும்பத்திற்குள் பாகபிரிவினை ஆன பிறகு 11 உட்பிரிவுகளாக பாகபிரிவினை அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். எங்கள் குடும்ப உறுப்பினர்கள் 1 ஏக்கர் 27 சென்ட் சுவாதினத்தில் இருக்கிறோம் என்றால் 13 சென்ட் குறைவாக இருக்கிறது. பாகபிரிவினையில் யாருக்கு கொடுத்த பாகத்தில் எந்த செக்குபந்தியில் குறைவாக வருகிறது என்றால் என்னுடைய பாகத்தில் குறைவாக

வருகிறது. எனக்கு பாகத்தில் வந்த சொத்தை நான் யாருக்காவது விற்பனை செய்திருக்கிறோனா என்றால் இல்லை. சுமா யார் என்றால் என் மகள் ஆவார். நானும் என் குடும்பத்தினரும் சேர்ந்து 1 ½ சென்டை மூர்த்தி என்பவருக்கு விற்பனை செய்திருக்கிறோமா என்றால் ஆமாம் . நான் மறந்துவிட்டேன். எனது சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் இல்லை என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 ஏக்கர் 27 சென்டில் என் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இருக்கிறோம் என்றும், என் குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் இந்த வழக்கில் சேர்த்திருந்தால் அவர்கள் 1 ஏக்கர் 27 சென்ட் இருப்பதை சொல்லியிருப்பார்கள் என்றும் அவர்களை இந்த வழக்கில் நான் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 1 ஏக்கர் 27 சென்ட் எங்கள் குடும்ப உறுப்பினர்களுக்குள் இருக்கிறது என்றும் பிரதிவாதிகளிடம் நாங்கள் கேட்பது தவறு என்றும், பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வந்த 32 சென்டிற்கு 4 எல்லைகள் தெரியுமா என்றால் தெரியும். கிழக்கு நாராயணப்பா, மேற்கு பக்கம் சீனிவாசன், சாட்சி மீண்டும் தனக்கு தெரியாது என்று கூறுகிறார். தாவா சொத்து எனக்கு பிதுராஜிய சொத்து என்பதால் இந்த வழக்கில் என் குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்திருந்தால் யாருக்கு எவ்வளவு சொத்து பிரிந்தது என்பதும், எவ்வளவு சொத்து விற்பனை செய்திருப்பது தெரிந்துவிடும் என்பதால் தான் நான் வேண்டும் என்றே தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்தால் சொத்தின் உரிமையாளர் யார் என்பது தெரிந்து விடும் என்பதால் தான் அதை மறைப்பதற்காக வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு 4 எல்லைகள் தவறாக சொல்லியிருப்பதால் தாவா சொத்து எங்கு வருகிறது என்பதை என்னால் சொல்லமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. முனிகாடு கிரயம் வாங்கியது போல் 06.07.1945 ல் ஸ்ரீகாந்த்ஐயா என்பவரிடம் இருந்து 2 ஏக்கர் 54 சென்டில் கபிலய்யா 1 ஏக்கர் 27 சென்ட் வாங்கியிருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. 1946 ல் கபிலய்யா, ரங்கம்மா என்பவருக்கு அதே விஸ்திரணத்தை விற்பனை செய்திருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. சர்வே எண்.307/1 ல் அதே விஸ்திரனத்தை ரங்கம்மா 1948 ல் முகைதீன் சாய்பு என்வருக்கு விற்பனை செய்திருக்கிறார் என்றால் அது தெரியாது. அந்த முகைதீன் சாய்பு 1975 ல் அதே விஸ்திரணத்தை கவுரம்மா என்பவருக்கு விற்பனை செய்திருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. கவுரம்மா 1,2 பிரதிவாதிகளின் பாட்டி என்றால் சரிதான். அந்த கவுரம்மா 1, 2 பிரதிவாதிகளுக்கு 27.11.1996 ல் தான பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் அது தெரியாது. சர்வே எண்.307/1 பிரதிவாதிகளுக்கு 3 உட்பிரிவுகளாக ஏற்பட்டிருக்கிறது என்றால் அது எனக்கு தெரியாது. சர்வே எண்.307/1A1 நஞ்சாரெட்டி மனைவி சாவித்ரியம்மாளுக்கு 55 சென்டும், முரளிதரன், நரேந்திரபாபுவுக்கு சர்வே எண்.307/1A2, 307/1B இரண்டும் சேர்த்து 72 சென்ட் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. ஆக மொத்தம் மூன்றும் சேர்த்து 1 ஏக்கர் 27 சென்ட் வருகிறது என்றால் அது தெரியாது. 1,2 பிரதிவாதிகளுக்கு பட்டா எண்.964 வந்த பிறகு அவர்கள் அந்த சொத்தின் சுவாதினத்தில் இருக்கிறார்கள் என்றால்

சரிதான். அவர்கள் சொத்தில் 1998 ல் 20 RCC வீடு கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறார்கள் என்றால் சரிதான். அதில் ஒரு RCC வீட்டில் அவர்கள் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் வாங்கிய சொத்தில் அவர்கள் சுவாதினத்தில் இருப்பதாகவும், எங்கள் சொத்தில் நாங்கள் சுவாதினத்தில் இருப்பதால் பிரதிவாதிகள் சொத்தில் எங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் போது பிரதிவாதிகள் அந்த சொத்தில் வீடுகள் கட்டியிருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு வந்த சொத்தில் நான் வீடுகட்டியிருப்பதை வழக்கில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. உண்மையை மறைத்து வழக்கு தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து விவரத்தில் சர்வே எண்.307/2 ல் 13 சென்ட் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். சர்வே எண்.307/2 ல் எங்களது குடும்ப உறுப்பினர்களும் சர்வே எண்.307/1 ல் 1, 2 பிரதவாதிகளும் இருக்கிறார்கள் என்றால் இல்லை. 13 சென்டிற்கு 4 எல்லைகள் என்ன என்றால் மேலே அவர்களது பங்கு, கீழே எனது பங்கு. அப்படி தான் நான் எனது வழக்கில் சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம். இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 செலவு தொகை ரூ.500 உடன் ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.